1993 ஏப்ரல் 23]

449—

ஓசூரில் நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

*15173— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொழில் நகரத்தில் ஓர் நகர கூட்டுறவு வங்கி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(22-வது பட்டியல்.)

1—

அரசு ஊழியர்கள் சிறுசேமிப்பில் தீவிரமாக முதலீடு செய்ய திட்டம்

வினா எண் 9462— டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறு சேமிப்பில் உற்சாகமாக வீரமாக அதிக அளவில் முதலீடு செய்ய அரசிடம் சிறப்பு திட்டங்கள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாத ஊதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு மட்டுமின்றி, மாத ஊதியம் பெறும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் உற்சாகமாக, தீவிரமாக சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டம் மூலம் இலகுவாக சேமித்திட சிறு சேமிப்பு திட்டங்கள் உள்ளன.